REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆடி 6உ வெள்ளி (22—7—55) ★ ★ வெளியூர்: ஆடி 7உ சனி (23—7—55) [இதழ் 33

'சர்க்கார் நடவடிக்கை எடுக்கும்'

சென்னை, ஜூலை 21—

திராவிட கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள், ஆகஸ்டு முதல் தேதியன்று தேசியக் கொடியை கொளுத்துவதாக அறிவித்துள்ளதை ஒட்டி, அதுபற்றி ஆலோசிக்க சென்னை மந்திரி சபைக் கூட்டமொன்று முதன் மந்திரி காமராசர் தலைமையில் கூடி விவாதித்தது. தேசியக் கொடியை கொளுத்துவது சாதாரண விஷயமெனக் கருதிவிட முடியாதென்றும், கொடி கொளுத்துவோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மந்திரி சபை முடிவு செய்ததாகத் தெரிகிறது. சம்மந்தப்பட்ட இலாகாக்கள், மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை என்ன என்பதைக் குறித்து ஆலோசனை நடத்திக்கொண்டிருக்கின்றனவாம்.

ஐய்யய்யோ! போஸ்டர்! போஸ்டர்!

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

பெரியார் போர் முரசு!

கருத்து அலைகள்

(நமது தனி நிருபர்)

சென்னை, ஜூலை 22—

பெரியார், இந்தி எதிர்ப்புக்காக என்று, ஆகஸ்டு 1-ந் தேதி நடத்துவதாக அறிவித்துள்ள தேசியக் கொடி கொளுத்தும் கிளர்ச்சியை அறிந்து அரசியல் வட்டாரம் திகைப்படைந்திருப்பதாகத் தெரிகிறது.

காமராசர் அவர்களையும், காமராசர் சர்க்காரையும் ஆதரித்துவரும் பெரியார், காமராசருக்கு அவருடைய எதிரிகளாலும் உண்டாக்க முடியாத இவ்வளவு பெரிய சங்கடத்தை ஏற்படுத்துவது குறித்து காங்கிரஸ் வட்டாரம் ஆச்சரியப்படுகிறது.

ஆச்சாரியார் கோஷ்டியைச்சேர்ந்த காங்கிரஸ்காரர்கள், 'பெரியாரின் இந்தக் கொடி கொளுத்தும் கிளர்ச்சி, நிச்சயமாகக் காமராசர் ஆட்சி மீது நேருவுக்குக் கோபம் பிறக்கும்படிச் செய்துவிடும்,' என்றும், 'அது காரணமாக, பழையபடி, ஆச்சாரியார் அரசாள வருவதற்கு வழி கிடைக்கக்கூடும்,' என்றும் ஆவலுடன் பேசிக்கொள்கின்றனர்.

சர்க்கார் அதிகாரிகள், இது சம்பந்தமான சட்டப் பிரச்சினை குறித்து ஆராய்ந்துகொண்டுள்ளனர்.

கடைசி நேரத்திலும், காமராசர், 'இந்தி திணிக்கப்படுவதை சென்னை சர்க்காரும், காங்கிரஸ் கட்சியும் ஏற்றுக்கொள்ளாது' என்று, நேரிலோ, அறிக்கை மூலமோ உறுதி அளிப்பதன் மூலம், 'கொடி கொளுத்தும் கிளர்ச்சியை நடைபெற ஒட்டாது செய்துவிடக்கூடும்' என்று காமராசர் கோஷ்டியினர் கருதுகின்றனர்.

'காமராசருக்குப் பெருந் தொல்லை கொடுப்பதாக அமைகிறது' என்ற வகையில், 'இது நடைபெறுவதற்கு நாமும் தூபம் போடுவதுதான் நல்லது' என்று ஆச்சாரியார் கோஷ்டியினர் கருதுகிறார்கள்.

'ஆகஸ்டு முதல் தேதிக்கு முன்பே, கொடி கொளுத்துவதாக போலீசுக்கு அறிவிப்பு அனுப்புவோர், கைதாகி, ஆகஸ்டு இரண்டு அல்லது மூன்றும் தேதி விடுதலை செய்யப்பட்டுவிடக்கூடும்,' என்று, காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர் வட்டாரம் பேசிக்கொள்கிறது.

அண்மையில் சென்னை கோட்டைக் கொடிமரத்திலுள்ள கொடியை அறுப்பதற்குச் சென்ற ஒருவர் மூன்று வாரக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்ட சம்பவத்தைச் சுட்டிக்காட்டி—'கொடி கொளுத்த முயற்சித்தார்கள்' என்று குற்றம் சாட்டி வழக்குப் போடாமல், 'கலகம் விளைவிக்க முயற்சி செய்தனர்; பொதுமக்கள் அமைதிக்குப் பங்கம் விளைவிக்க முயன்றனர்' என்று குற்றம் சாட்டி வழக்கு தொடுத்து, சிறு தொகை அபராதம் விதித்தோ, சில வார சிறை தண்டனை கொடுத்தோ கிளர்ச்சியை அலட்சியமானதாக்கிக் காட்டிவிடவே சர்க்கார் தீர்மானிக்கும்—என்று காங்கிரஸ் வட்டாரத்திலுள்ள வக்கீல்களிடையே கருத்து நிலவுகிறது.

'பொதுவாக ஆகஸ்டு முதல் தேதியன்று பொதுக்கூட்டம், ஊர்வலம் ஆகியவைகளுக்குத் தடை உத்தரவு போடப்படலாம்'—என்றும் பேசிக்கொள்ளப்படுகிறது.

'திராவிட முன்னேற்றக் கழகத்தினர், பிள்ளையார் உடைப்பின்போது ஒதுங்கி இருந்ததுபோலவே, கொடி கொளுத்தும் காரியத்திலும் கலந்துகொள்ள மாட்டார்கள்'—என்று பொதுமக்கள் பேசிக்கொள்வதுடன், திராவிட கழகத்திலேயே ஒரு குறிப்பிட்ட பகுதியினர், 'இந்தக் கிளர்ச்சியில் தி. மு. கழகம் சேரக்கூடாது' என்றும், 'சேர்ந்தால் கிளர்ச்சியின் தன்மை பாழாகிவிடும்' என்றும் கூறிவருவதாகத் தெரிகிறது

எனினும், 'மிகப் பெரிய அளவில் கிளர்ச்சி நடத்தப்படுவதானல், தி. மு. கழக ஒத்துழைப்பு கிடைத்தால் மட்டுமே சாத்தியமாகும்,' என்ற கருத்தும், திராவிட கழகத்தில் வலிவுடன் காணப்படுகிறது.

தி. மு. கழகப் பொதுச்செயலாளர், கர்நாடக மாவட்ட சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு சென்னை வந்து சேர்ந்தார்; அவரிடம் இது பற்றிக் கேட்கப்பட்டபோது, அவர், புன்னகையுடன்; 'திராவிட கழகம் நடத்தும் கிளர்ச்சி பற்றி நான் எப்படி அபிப்பிராயம் கூற முடியும்,' என்று கூறிவிட்டார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

'எங்கும் ஒட்டி இருக்கிறார்களே, தடுக்க வேண்டாமா?'

தீண்டாமை ஒழிப்பு போஸ்டர் கண்டு பீதி

தி. மு. கழக முயற்சி பலன் அளிக்கிறது

(நமது திருச்சி நிருபர்)

புதிய தீண்டாமை ஒழிப்பு சட்டத்தின் உள்ளடக்கத்தை விளக்க சென்னை அரசாங்கம் ஒரு படத்தை வெளியிட்டிருந்ததை அனைவரும் அறிவர். அந்தப் படம் பார்ப்பன உலகத்தைச் சீறி எழச் செய்தது

ஆங்கிலம் கற்ற பார்ப்பனர் பலர், சென்னை அரசாங்கத்தைக் கண்டித்து, காரசாரமான மடல்கள் தீட்டினர்; அதைப் பின்பலமாகக்கொண்டு, 'இந்து' இதழ், சென்னை அரசாங்கத்திற்கு எச்சரிக்கையே விடுத்தது.

'அறப்போர்,' அரசாங்க அலுவலகத்தின் முன் 'ஆர்ப்பாட்டம்,' 'கண்டன நாள்'—என்றெல்லாம் பயமுறுத்தியது, திருச்சி பார்ப்பன சங்கம்!

பார்ப்பன உலகத்தின் அச்சுறுத்தலுக்கு, சென்னை அமைச்சர் குழுவும் வளைந்து கொடுத்தது—அல்லது இணங்கி வந்தது!

சென்னை அரசாங்கம் காட்டிய மனமாற்றம், ஒரு புதிய பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்தை நமது தி. மு. கழகத்திற்குத் தந்தது.

நமது தி. மு. கழகம் தவிர, அக்கடமையை வெற்றிகரமாக நிறைவேற்ற வேறு யார் இருக்கிறார்கள், இந்த நாட்டில்?

அதே, தீண்டாமை ஒழிப்புப் படத்தை, சிறு மாற்றத்துடன், தி. மு. கழகம் வெளியிட்டது. தமிழ் நாடு எங்கும் உள்ள தி. மு. கழக கிளைகளுக்கு அப்படங்கள் அனுப்பிவைக்கப்பட்டு, அவைகளும் அப்படங்களை ஏராளமான மக்கள் பார்த்து உண்மையை உணர்ந்து கொள்ளும் வகையில், முக்கிய இடங்களில் ஒட்டிவைத்தன.

நமது கழகத்தின் இப்பணி, பார்ப்பன உலகத்தை நடுங்க வைத்திருக்கிறது.

பார்ப்பன உலகம் எரிமலையென எதிர்ப்பை உமிழத் தொடங்கி இருக்கிறது; அரசாங்கத்தை 'அபயம்' கோரக் கெஞ்சியும் இருக்கிறது.

பார்ப்பனர் மனநிலை குறித்து, பல ஊர்களிலிருந்து, மடல்கள் வந்தவண்ணம் இருக்கின்றன.

இடமின்மையால், திருச்சி நிருபரின் செய்தி மட்டும் இங்கு தரப்படுகிறது:—

"திருச்சி நகரின் முக்கிய இடங்களிலெல்லாம் தி. மு. கழகம் தயாரித்த தீண்டாமை ஒழிப்புச் சட்ட விளக்க சுவரொட்டிகள், ஒட்டிவைக்கப் பட்டுள்ளன.

(4-ம் பக்கம் பார்க்க)

எங்கள் வாழ்வை உயர்த்துக!

அகில பர்மா பிச்சைக்காரர் மாநாடு

அடுத்த மாதத்தில் — இதுவரை இல்லாத வகையில், 'அகில பர்மா பிச்சைக்காரர்கள் மாநாடு, ஒன்று கூட்டப்படும் என்று செய்தி வந்திருக்கிறது.

மத்திய பர்மாவில் உள்ள மின்பு மாவட்டத்திலிருக்கும் கியாங் தாவியா எனுமிடத்தில் மாநாடு கூடுமாம்.

இந்த இடம் தேர்ந்தெடுக்கப் பட்டதற்குக் காரணம், இந்தப் பகுதிதான் பர்மாவின் மிகப் பெரிய 'பிச்சைக்காரர் காலனி' யாக விளங்குகிறதாம்!

அருகில் உள்ள நகர்ப்புறங்களிலிருந்தெல்லாம் பிச்சைக்காரர் பிரதிநிதிகள் கலந்துகொள்வர் என்று தெரிகிறது.

தங்களின் நிலை உயர சர்க்கார் பாடுபட முன்வரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்ற அவர்கள் விரும்புகின்றனராம்!

இந்தியாவில் 50 லட்சம் குருடர்கள்

"இந்தியா முழுவதும், அரைகுறையாகவும், கண் பார்வை இழந்தவர்களாகவும் சுமார் 50 லட்சம் பேர் இருக்கின்றனராம்!

இந்த வகையில், உலகத்தில் இந்தியா இரண்டாவது இடமும், எகிப்து முதலிடமும் பெறுகின்றனவாம்!

'ஒரு போலீஸ் அதிகாரி கோரினும் கொடியையும் கொளுத்தமாட்டேன்—தடையையும் மீறமாட்டேன்'

திராவிட கழகக் கிளர்ச்சி குறித்து பெரியார்

சென்னை, ஜூலை 21—

"..........அன்று யாரேனும் ஒரு போலீஸ் அதிகாரி, என்னிடம், 'கொடியை எரிக்கவேண்டாம்,' எனக் கேட்டுக்கொண்டால், நான் கொடியை எரிக்காமலிருந்துவிடுவதுடன், ஏதேனும் தடை உத்தரவுகளிருப்பின் அதனையும் மீறமாட்டேன்; கழகம், நிலையை ஆராய்ந்து, அடுத்து செய்யவேண்டியது பற்றி முடிவு செய்யும்;

"கழகம், இந்தக் கொடி கொளுத்தும் ஆர்ப்பாட்டத்தை நடத்த முடிவெடுத்ததற்குக் காரணம், போது இடங்களிலும், இரயில்வே நிலையங்களிலும் உள்ள இந்திப் பெயர்களை அழிக்கும் முயற்சிகளை சர்க்கார் கவனிக்கவில்லை என்பதே; மேலும் சில மந்திரிகள்கூட அந்த இயக்கத்தை ஏளனமாகப் பேசியிருக்கின்றனர்,"

—என்று பெரியார் அவர்கள், பத்திரிகையாளரிடம் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

"தமிழ் நாட்டின் மீது இந்தி திணிக்கப்படமாட்டாது — என்று, கொள்கை விளக்க அறிக்கை ஒன்றை இந்திய சர்க்கார் வெளியிடுமானல், இந்திக்கு எதிராக நடத்தப்படும் இந்த இயக்கத்தைத் திரும்பப் பெற்றுவிடுகிறேன்;

"இந்தியைப் பொறுத்த வரையில், காங்கிரசுக்கும் — திராவிட கழகத்திற்கும், கருத்து வேறுபாடுகள் இல்லை;

"ஆனல் நான் வருத்தப்படுவதெல்லாம், ஆட்சியில் உள்ள மாநில காங்கிரஸ், புது டில்லிக்கு இந்தி பற்றி இங்குள்ள கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு மாருக, தென்னாட்டிற்கு தேவையில்லாத

(4-ம் பக்கம் பார்க்க)

காமராசர் டெல்லி செல்கிறார்

இந்திய உள்நாட்டமைச்சருடன் உரையாடுவார்?

சென்னை, ஜூலை 22—

சென்னை முதலமைச்சர் காமராசர், நாளை (23-ந் தேதி) விமான மூலம் டெல்லி செல்ல இருக்கிறார். அங்கு நடைபெற இருக்கும் தேசிய அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிறகு, இந்திய சர்க்கார் உள்நாட்டமைச்சர் பண்டித பந்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவார் என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 22—7—'55 வெள்ளி

நமது கேள்வி

இந்தியப் பேரரசுக்குள் அடங்கிக்கிடக்கும் பல மாநிலங்களும், தமக்கென ஆட்சிபீடங்கள், சட்ட சபைகள், மந்திரி சபைகள் உடையனவாக இருந்தபோதிலுங்கூட, மாநில சட்ட மன்றங்களும், மந்திரி சபைகளும் குறிப்பிடத்தகுந்த அதிகாரங்கள் எதுமற்றவையாக இருக்கின்றன—வெறும் வரி வசூலிக்கும் அதிகாரங்கள் மட்டுமே உடையனவாயிருக்கின்றன என்ற பொதுவான குற்றச்சாட்டு, ஏற்கனவே நாட்டில் நிலவி வருகின்றது.

மாநிலங்கள், 'சுயராஜ்ய' காலத்திற்கு முன், காங்கிரசாரால் வர்ணிக்கப்பட்டபடி, தேவையான சுதந்திரமும், அதிகாரமும் பெற்றவையாய் இருக்கவில்லை; எல்லா அதிகாரங்களும் பறிக்கப்பட்டு, வடநாட்டு—டெல்லி ஆட்சியாளரிடம் குவிந்து கிடக்கின்றன என்பதை நல்ல உள்ளம் கொண்டோர் எல்லாரும் உணர்ந்தே இருக்கின்றனர்.

டெல்லி ஆட்சியாளர்கள் தங்களிடம் குவிந்துள்ள அதிகாரங்களை, என்றென்றைக்கும் காப்பாற்றிவைத்துக் கொள்வதற்கான முயற்சியில் பகிரங்கமாக ஈடுபட்டிருப்பது மட்டுமின்றி, மேலும் மேலும் மாநிலங்களிடமுள்ள சிறிதளவு அதிகாரங்களையும் சிறுகச் சிறுக அபகரித்துவிட முயற்சிக்கின்றனர் என்று அரசியல் வாதிகள் குறைப்பட்டு வருவதையும் நாட்டு மக்கள் கவனித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஜனநாயகம், அதன் முழுப் பொருளுடன் நிலைத்து நீடித்து, மக்களுக்குப் பலன் தரவேண்டுமானால், அந்த ஜனநாயக முறைப்படி ஆளுகைக்குட்பட்ட மக்களை ஆளும் அதிகாரம் ஓரிடத்தில் குவிந்திருப்பது, எதிர்பார்க்கிற பலனைத் தராது என்பதுமட்டுமின்றி, ஓரிடத்தில் குவிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை உடையவர்கள் ஜனநாயக முறைக்கே சவக்குழி தோண்டிவிட்டு சர்வாதிகார ஆட்சியை மேற்கொள்ளும் ஆபத்தையும் விளைவிக்கக்கூடியதாகும்—என்பதை, ஜனநாயக ஆட்சி முறைபற்றிய அனுபவங்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

அந்த அடிப்படையில்தான், மிகச் சிறிய ஆளும் சபையான கிராமப் பஞ்சாயத்து சபைகளுக்குக்கூட, அதன் ஆளுகைக்குட்பட்ட பகுதிக்குள் மக்களின் நலனுக்குகந்த காரியங்களை மேற்கொள்ள விரிவான அதிகாரம் வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்படுகிறது.'

நிலைமை இவ்வாறிருக்கையில், இந்தியப் பேரரசு, தான் குவித்து வைத்துக்கொண்டு, மாநில சர்க்கார்களை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் அதிகாரங்களை, மாநிலங்களுக்கு தரவேண்டுமென்ற பரவலான எண்ணத்திற்கு மாறாக, மேலும் மேலும் மாநில சர்க்கார்களின் அதிகாரங்களையும் சுரண்டுவதில் கண்ணுங் கருத்துமாயிருந்துவருவது,நாட்டின் எதிர்காலத்தைக் கவலையுடன் நோக்கிக்கொண்டிருப்பவர்களுக்கு அச்சமூட்டுவதாயுள்ளது.

இந்தியாவெங்கணுமுள்ள பெரும் பெரும் கோவில்களின் நிர்வாகத்தை இனி மத்திய ஆட்சியே மேற்கொள்ளக்கூடும் என்று சில திங்களுக்குமுன் ஒரு செய்தி வெளிவந்தது; அப்போது நாம் அந்த முயற்சி பற்றிக் கண்டித்து எழுதியிருந்தோம்.

பின்னர், இந்தியாவெங்கணும் மின்சார உற்பத்தியையும், விநியோகத்தையும் மத்திய அரசாங்கமே மேற்கொள்ளுவது என்ற ஒரு முயற்சி பற்றிச் செய்தி வந்தது. அந்த முயற்சி எத்தனை ஊறுகள் விளைவிக்கக் கூடியது என்பதைக் குறிப்பிட்டு, சென்னை—ஆந்திர சர்க்கார்கள், தாங்கள் அந்த முயற்சியை எதிர்ப்பதாகக் கருத்தறிவித்தனர்.

இப்போது காஷ்மீர்—ஸ்ரீநகரில் கூடிய எஞ்சினீயர்கள் விவாத அரங்கு ஒன்றில், 'இந்தியாவில் திட்டமிடப்படும் மின்சார நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்ற மத்திய நிறுவனம் ஒன்றை அமைக்கவேண்டும்,' என்ற சிபாரிசு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்படி ஒரு நிறுவனம் அமைக்கப்பட வேண்டியதின் அவசியம் என்ன? இப்படி ஒரு நிறுவனம் இல்லாமலேயே இதுவரை உருவாகியுள்ள மின்சார நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம் நிறைவேறவில்லையா?—என்பன போன்ற கேள்விகளுக்கு அப்பால், இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பை, அதிகாரத்தை மாநிலங்களிடமிருந்து பறித்துக் கொள்கிற உள்நோக்கம் அந்த சிபாரிசுக்குள் அடங்கிக் கிடக்கிறதா, இல்லையா என்பதைத்தான் நாட்டு மக்கள் அதிகமாகக் கவனிக்கின்றனர்.

மேலும் மின்சார, நீர்ப்பாசனத் திட்டங்களை மேற்கொண்டு கட்டிமுடிக்கும் வேலையை மத்திய குழு ஒன்று மேற்கொண்டுவிட்டால், அப்போது தென்னாட்டில் நிறைவேற்றப்பட்டுவரும் சிறு சிறு நீர்ப்பாசனத் திட்டங்களைக்கூட ஏதேனும் சாக்குபோக்குக் கூறி, காலந்தாழ்த்திவிடக்கூடிய சாத்தியக்கூறு இருக்கிறது. அந்த மத்தியக் குழுவில் இடம் பெறுவோருக்கு, தங்களின் கைவரிசையைக் காட்டுவதற்கு, அவர்களுக்கு என்ன—தங்களின் தாயகமான 'வட நாட்டுப் பற்று' ஏற்படாமலா போய்விடும்?

இந்தியப் பேரரசு போய்க்கொண்டிருக்கும் 'பெரும் போக்கிற்கு,' எஞ்சினீயர்களின் விவாத அரங்கு இப்படி ஒரு சிபாரிசைச் செய்திருப்பது, துணையாகவே அமையும்; இந்தப் பெரும் போக்கினை எத்தனை நாளைக்கு தென்னாட்டு மக்கள் சகித்துக்கொள்ளப் போகிறார்கள் என்பதே நம் கேள்வி!

காஷ்மீருக்கு அரசியல் சட்டம்

இப்போதுள்ள சட்ட சபையே அரசியல் நிர்ணய சபையாக மாறுமாம்

காஷ்மீரில் இப்போதுள்ள சட்ட சபை தன்னைத்தானே அரசியல் நிர்ணய சபையாக மாற்றிக்கொண்டு, பாகிஸ்தான் பிடியிலிருக்கும் காஷ்மீர் பகுதியின் அரசியல் நிலைகளையும் கணக்கிலெடுத்துக்கொண்டு, பாகிஸ்தான் விளைவிக்கக்கூடிய தடைகளைச் சட்டை செய்யாமல், காஷ்மீருக்கான அரசியல் சட்டத்தை வகுக்கும் என்று அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

காஷ்மீர் சட்ட சபையின் அடுத்த கூட்டம் செப். 28-ல் கூடி, சுமார் ஐந்து அல்லது ஆறு வாரங்களில் முக்கியமான பல மசோதாக்களை நிறைவேற்றும் என்று கூறப்படுகிறது.

தபால்காரர் தூங்கியதின் விளைவு

தபால் பட்டுவாடா தடைபட்டது

தோஹத் புகைவண்டி நிலையத்திற்குச் சென்று தபால் பையைப் பெற்று வர அனுப்பப்பட்ட தபால்காரர், மெயில் வண்டி இரயில் நிலையம் வந்தபோது தூங்கிக்கொண்டிருந்து விட்டார். அவர் தபால் பையைப் பெற முடியாத வகையில், இரயில் வண்டி நிலையத்தை விட்டுப் புறப்பட்ட பின்னரே, அவர், தூங்கி விழித்திருக்கிறார். அதன் விளைவாக தோஹத், ஜாலத், ஜேசவாதா, கார்படா, சஞ்சேலி, அலிராஜ்பூர் ஆகிய ஊர்களுக்கு தபால் பட்டுவாடா இல்லாது போயிற்றாம்!

பூனையைக் காப்பாற்றும் முயற்சியில்........!

மூன்று சிறுவர்கள் பலி

தால்தாள்கஞ், ஜூலை 20—

தங்களின் பிரியமான பூனை ஒன்று கிணற்றுக்குள் விழுந்துவிட்டதைக் காப்பாற்ற நினைத்த மூன்று பையன்களும் கிணற்றுள் மூழ்கி பலியாகிவிட்ட சோகச் செய்தி தரப்பட்டுள்ளது.

பூனை தற்செயலாகக் கிணற்றுக்குள் விழுந்தது; அதனைக் காப்பாற்றும் நோக்குடன் ஒரு பையன் கிணற்றுக்குள் குதித்தான்; இதை உன்னிப்பாகக் கிணற்றுக்குள் உற்று நோக்கிக் கொண்டிருந்த மற்ற இரு பையன்களும், தவறிக் கிணற்றுக்குள் விழுந்துவிட்டனர்; இப்படி பரிதாபகரமாக மூன்று பையன்களும் பலியாயினர் எனத் தெரிகிறது.

கன்னடத் தலைநகரில் பொதுச் செயலாளர்

மகத்தான வரவேற்பு — மாபெரும் பொதுக்கூட்டம்

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் **17—7—55-ல்**, பெங்களூருக்கு வருகை தந்தார். பெங்களூர் புகை வண்டி நிலையத்தில் அவருக்கு மகத்தானதோர் வரவேற்பளிக்கப்பட்டது.

பின்னர் பொதுச் செயலாளர் அவர்கள், பெங்களூர் பிளாக் பள்ளி மைதானத்தில் நூற்றுக்கணக்கான தோழர்களின் ஆரவார மகிழ்ச்சிப் பேரொலிக்கிடையே கழகக் கொடியினை ஏற்றி வைத்தார்.

பொதுச் செயலாளர் தலைமையில், காலை 11 மணியளவில், அப்பாவுப்பிள்ளை ஆரம்பப் பள்ளியில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் புதிய செயற் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

உறுப்பினர்கள் கூட்டத்தில் பேசிய பொதுச் செயலாளர் அவர்கள், உறுப்பினர்களனைவரும் கண்ணியம், கட்டுப்பாடு உடையவர்களாகவும், சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடந்துகொள்வதுடன் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் தோழமை உணர்வுடனும், குடும்பப் பாசத்துடனும் நடந்து கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்

அன்று மாலை 4½ மணியளவில் ஆயிரத்திற்கு மேற்பட்ட தோழர்கள் கலந்துகொள்ள, பொதுச் செயலாளர் அவர்கள், நகரின் முக்கிய வீதிகளின் வழியாகத் தோழர் ஆர். ஆறுமுகம் தலைமையில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். புதிய செயற்குழு உறுப்பினர்களும், பொதுச் செயலாளர் அவர்களும் இரண்டு வெள்ளைக் குதிரைகள் பூட்டப்பட்ட 'சாரட்' வண்டியில் அமர்த்தப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர்

ஊர்வலம், மாலை சுமார் 6½ மணி அளவில் சிக்கலால்பாக் மைதானத்தை அடைந்ததும், அக்கிப்பேட்டை தி.மு கழகச் சார்பில் தோழர் ஏ. டி. பிரான்சிஸ் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது

தலைவர் முன்னுரைக்குப் பின்னர் பொதுச்செயலாளர் இரா நெடுஞ்செழியன் அவர்கள் நீண்டதோர் அரிய உரை நிகழ்த்தினார்.

அவரது சொற்பொழிவைக் கேட்கத் திரண்டிருந்த பல்லாயிர மக்களும், அவரது சொற்பொழிவு துவக்கத்திலிருந்து முடிவுவரையிலும் வெகு அமைதியாக இருந்து கேட்டுப் பயன்பெற்றனர்.

திராவிடநாடு அமைக்கப்பட வேண்டியதின் அவசியத்தையும், திராவிட நாடு பிரிந்தால்தான் தென்னாட்டவரின் வாழ்வு கிடைக்கும்—வாழ்வு வளம் பெறும்—உயர்வுறும் என்பதையும் பொதுச் செயலாளர் அவர்கள் விளக்கினார்

நகர்மன்ற அனுமதியின்றி நெல் அரைக்கும் ஆலை

விருதுநகர், ஜூலை 21—

நகர் மன்ற லைசென்ஸ் இல்லாமலேயே நெல் அரைக்கும் இயந்திர ஆலைகள் நடத்த இராமநாதபுரம் மாவட்டக் கலெக்டர் அனுமதித்துள்ளார் எனத் தெரிகிறது.

சென்னை சர்க்கார் நெல் குத்தும் ஆலைகளுக்கான லைசென்ஸ் விதிமுறையின்கீழ் இராமநாதபுரம் மாவட்டக் கலெக்டர், இராமநாதபுரம் நகர் மன்றத்தைப் பொருட்படுத்தாமல் தமக்குள்ள அதிகாரத்தின் பேரால் மேற்படி அனுமதி வழங்கியது இதுவே முதன்முறையாகும்.

சூதாடும் தீய பழக்கம்

ஒழித்துவிடுவதற்கு சட்டம் திருத்தப்படுகிறது

கடுந்தண்டனை தரப்படுமாம்

சென்னை, ஜூலை 12—

நியூயார்க் பருத்தி விலை, தெருக்களில் ஓடும் மோட்டார் கார்களின் நெம்பர், குதிரைப் பந்தயம், தங்கம், வெள்ளி மார்க்கெட் ஆகியவற்றிலுள்ள விலையின் எண்கள், மற்றும் வேறெந்தப் பொருட்களின் விலை, பங்கு மார்க்கெட் விலை அல்லது எண்கள், பரிசுப் போட்டிகளின் முடிவுகள் பற்றிய சூதாட்டங்கள் தெருவில் நடைபெற்றாலும் அல்லது வீடுகளில் நடைபெற்றாலும் அவற்றைத் தடை செய்து சூதாடுபவர்களைத் தண்டிக்க வேண்டுவது அவசியம் என்றும், அதனைக் கையாளும் முறையில் சென்னை நகர போலீஸ் சட்டமும், சூதாட்டச் சட்டமும் திருத்தப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சீட்டு விளையாடுதல், குதிரைப் பந்தயங்கள் ஆகியவை சம்பந்தமான சூதாட்டங்கள் நடைபெறுவதைத் தடுக்க ஏற்கனவே சட்டங்கள் இருந்துவருகின்றன.

திருத்தப்பட்டுள்ள சட்டத்தின்படி, சூதாட்டத்திற்கென வீடுகளில் அறையோ, இடமோ வைத்துக் கொண்டிருப்பவர்கள், இச்சூதாட்டத்திற்காக ரொக்க வசதி செய்து தருபவர்கள் ஆகியோருக்கு ஓராண்டு சிறைத் தண்டனையோ அல்லது 1,000 ரூபாய் அபராதமோ விதிக்கப்படலாம் என்றும், விசேட காரணங்கள் இருந்தாலொழிய குறைந்தபட்சம் ஒருமாத சிறைத் தண்டனை, அல்லது ரூ 500 அபராதமும், அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கப்படலாம் என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

சூதாடுகின்ற இடங்களில் இருப்பவர்களுக்கும் ஒருமாத சிறைத் தண்டனையும், ரூ 500 வரை அபராதமும் விதிக்கப்படலாமாம். சூதாடுகின்ற இடத்தில் இருந்ததற்கு வேறு எவ்விதக் காரணங்களும் நிரூபிக்கப்படாவிட்டால், அவர், சூதாடுவதற்காகவே அங்கிருந்தார் என்றே மதிப்பிடப்படும் என்றும் அவ்விதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இத்தகைய சூதாட்ட பேரம் பொதுத் தெருவில் நடைபெற்றால் 3 மாதம் சிறைத் தண்டனையும், ரூ. 300 அபராதமும் விதிக்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இந்தத் திருத்தச் சட்டம் சென்னை மாநிலம் முழுமையிலும் அமுல் நடத்தப்படும் என்றும் தெரியவருகிறது.

சிந்திரியில் மேலும் ஒரு உரத் தொழிற்சாலை

50 லட்சம் பவுன் செலவில் அமையும்

இத்தாலியக் கம்பெனியுடன் ஒப்பந்தம்

சிந்திரி வட்டத்தில் சுமார் 50 லட்சம் பவுன் செலவில் உர உற்பத்தித் தொழிற்சாலை அமைப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றை இந்திய சர்க்கார், இத்தாலி நாட்டின் பிரபல இரசாயன கம்பெனியான 'மான்டெகாடினி' என்ற நிறுவனத்துடன் மேற்கொண்டிருக்கின்றனர் என்று தெரிகிறது

இந்தத் தொழிற்சாலைதான் ஆசியாவிலேயே முதல் முதலான தொழிற்சாலை[illegible]யிருக்குமாம்.

யுத்தத்திற்குப் பிறகு இத்தாலியிடம் ஒப்படைக்கப்படும் இந்தத் தொழிற்சாலை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிற 'கம்பெனி'யின் உதவித் தலைவரான பேராசிரியர் கியாகோமே பாஜர் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட முறைப்படி, புதிய வகை உர உற்பத்தியில் ஈடுபடுமாம்.

இதுமாதிரி உர உற்பத்திக்கான தொழிற்சாலை நிறுவுவதற்காக கொலம்பியா, வெனிசுலா ஆகிய இடங்களிலும் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவாம்!

இரண்டாவது . ஐந்தாண்டுத் திட்டம்

'வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க உதவாது'

மேற்கு வங்க முதன் மந்திரி கருத்து

கல்கத்தா, ஜூலை 20—

"மத்திய திட்டக் குழு தயாரித்துள்ள இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நகல் திட்டம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க எந்தவகையாலும் உதவாது,"

என்று, மேற்கு வங்க முதன் மந்திரி டாக்டர் பி. சி. ராய் தெரிவித்திருக்கிறார்.

"இரண்டாம் திட்டத்தில், கைத்தொழிலுக்கும்—கனரகத் தொழில்களுக்குமிடையே எந்தஒரு இடைத் தொழிலும் இல்லை," என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

"உருக்குத் தொழில் போன்ற கனரகத் தொழில்கள் 4 ஆண்டுகளுக்குக் குறைவான காலத்தில் நிர்மாணிக்கப்பட முடியாது; எனவே, அவை, வேலையில்லாத் திண்டாட்டத்தை உடனடியாகப் போக்க உதவ முடியாது; ஒருக்கால், மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நிரம்பப் பெருக்கு அவைகள் வேலை தரக்கூடும்;

"கிராமங்களில் கைத்தொழில்கள், குறைவான வேலையை நிறைவு செய்ய உதவலாமே தவிர, ஏற்கனவே வேலையற்றிருப்போருக்கும், அடுத்துவரும் வேலையற்றிருப்போருக்கும் வேலை தரக்கூடியன அல்ல; எனவே, சிறிய—மத்திய தரத் தொழில்கள், பட்டு உற்பத்தி போன்றவை, வாழ்க்கைக்குத் தேவையான பலரகப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் நிறுவப்பட வேண்டும்," என்று கூறியிருக்கிறார்—டாக்டர் ராய்.

சென்னை மாநில கைத்தறி துணிகள்

அயல் நாடுகள் தேவைக்கு ஏற்றாற்போல் நெய்யப்பட வேண்டுமாம்!

நெசவாளர்கட்கு யோசனை கூற அமெரிக்க நிபுணர்கள் வருகை?

அமெரிக்காவில் இந்தியத் துணிகளுக்கு நல்ல கிராக்கி இருக்குமென்றும், கைத்தறித் துணி நெய்வதில் மற்ற எல்லா நாடுகளைவும்விட இந்தியாவின் கைத்திறமை சிறப்பாக உள்ளதென்றும், இத்திறன்தான் மற்ற நாடுகளில் இந்தியக் கைத்தறித் துணிகளின் சிறப்புக்குக் காரணமாக உள்ளதென்றும், நியூயார்க்கில் கடந்த 15 ஆண்டுகளாக இந்தியத் துணிகளை விற்பனை செய்துவரும் ரிச்சர்ட் ஜாக்கப்சன் என்பவர், தமது இந்திய சுற்றுப்பயணத்தின்போது, சென்னையில் நடைபெற்ற பேட்டி ஒன்றில் கூறியிருக்கிறார்.

தன்னுடைய கம்பெனிக்கு மட்டும் அனுப்பப்படும் 50 முதல் 75 ஆயிரம் கெசம் துணிகளில் சென்னை கைக்குட்டைகள் நெசவிலும், அமெரிக்காவின் விருப்பத்திற்கும் ஏற்றாற்போல் செய்யப்பட்டால், அங்கு அவற்றின் வியாபாரம் தற்போதைவிட மும்மடங்காக அதிகரிக்கும் என்றும் அவர் கூறியிருக்கிறார்

சென்னை கைக்குட்டைகள் அமெரிக்காவில் அதிகம் விற்பனையாவதற்கான காரணம், அவை, கோடைகால ஆடைகள் தயாரிக்கப் பெரிதும் உபயோககரமானவையாக இருப்பதே என்றும் அவர் கூறினர்.

மேலும் இந்திய நெசவாளர்களுக்கு யோசனை கூற அமெரிக்க நிபுணர்கள் தருவிக்கப்பட்டால், அமெரிக்காவிற்குக் கைத்தறித் துணி ஏற்றுமதி அதிகரிக்கலாம் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

தென்னாட்டுதிட்டங்கள் நிறைவேறும்லட்சணம்

திரு-கொச்சி மாநிலத்தில் அண்மையில் துவக்கப்பட்ட மின்சாரத் தொழிற்சாலை ஒன்றில், மாநில பணமுடையின் காரணமாகத் தொடர்ந்து வேலை நடைபெறாமல் தடைபட்டுவிட்டதாகத் தெரிய வருகிறது.

அந்தத் தொழிற்சாலையைக் கட்டி முடிக்க சுமார் ரூ 10 லட்சத்தில் திட்டமிடப்பட்டதென்றும், அத்தொகையை, பொது மக்களிடமிருந்து நிதி திரட்டியும், சர்க்காரிடமிருந்து மானியமாகவும் பெறுவதென்றும் திட்டமிடப்பட்டு சர்க்காரிடமிருந்து பங்குத் தொகையாக ரூ. 3 லட்சம் பெறப்பட்டதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டியாகிவிட்டதென்றும், ஆனால் சர்க்கார் வாக்களித்துள்ள மானியம் ரூ 3 லட்சம் இன்னும் தரப்படவில்லை என்றும், இதனால்தான் அத்திட்ட வேலைகள் மேலும் தொடர்ந்து நடைபெற இயலாமல் நிலைநின்றுவிட்டதென்றும் கூறப்படுகிறது.

இதனிடையே, ஆல்வாயை அடுத்த கலாமசேரி எனுமிடத்தில் 5 ஏகர் நிலத்தில் மேற்படி திட்ட வேலைகளுக்கான கட்டிட வேலைகள் அனைத்தும் முடிந்துவிட்டன என்றும், தேவையான சில இயந்திர சாதனங்கள்கூட அங்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி தொழிற்சாலை பிரபல பிரிட்டிஷ் கம்பெனி ஒன்றின் துணையுடன் நடைபெறும் என்றும், துவக்கத்தில் அத்தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 200 'டிரான்ஸ்பார்மர்'கள் வீதம் உற்பத்திச் செய்யுமென்றும், மேலும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

ரூ. 23,37,81,200 செலவில் திட்டம்

21,000 கிராமங்கள் மின்சார மயமாக்கப்படும்

மதுரை, ஜூலை 20—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய வேலைகளுக்கென ரூ. 23,37,81,200 செலவில் ஒரு திட்டத்தை, இராமநாதபுரம் மாவட்டக் கலெக்டர் தயாரித்து சென்னை மாநில சர்க்காரிடம் சேர்த்துள்ளார் எனத் தெரியவருகிறது.

இத்திட்டப்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 2000 ரெவின்யூ கிராமங்களனைத்தும் மின்சார மயமாக்கப்படும் என்று தெரியவருகிறது.

தடை தகர்ந்தது!

'பலுசிஸ்தான் காந்தி' என்று அழைக்கப்படும் அப்துல் சமத்கான்மீது விதிக்கப்பட்டிருந்த எல்லா நடமாட்டத் தடையுத்தரவுகளையும் பலுசிஸ்தான் சர்க்கார் ரத்து செய்துவிட்டனர் என்று கூறப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்னர், மிக முக்கியமான ஒரு தேசிய முஸ்லீமாக இருந்துவந்த அவர், சென்ற ஓராண்டு காலமாக தமது சொந்தக் கிராமத்தைத் தவிர வேறு எங்கும் நடமாடக் கூடாதென்று தடை செய்யப்பட்டிருந்தார்; பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர், பாகிஸ்தான் சர்க்கார், அவரை, நான்கு ஆண்டுகள் சிறையில் தள்ளினர்.

வியட்நாமுக்கு பொருளாதார உதவி!

40 கோடி ரூபிள்கள் தர ரஷ்யா சம்மதம்

ஹோ-சி-மின் வருகையின் விளைவு

வடக்கு வியட்நாமுக்கு (வியட்மின்) பொருளாதாரத் துறையின் சீர்திருத்தத்திற்காக 25 தொழிற்சாலைகள் ஆரம்பிக்கவும், நிலபாக ஆராய்ச்சிகள் நடத்தவும், மருத்துவ மனைகள் ஏற்படுத்திக் கொடுப்பதுடன் வியட்நாம் மக்களுக்குத் தொழில் நுணுக்கப் பயிற்சி அளிக்கவுமாக மொத்தம் 40 கோடி ரூபிள் உதவி செய்ய சோவியத் சர்க்கார் முன்வந்துள்ளனராம்.

வடக்கு வியட்நாம் குடியரசுத் தலைவர் ஹோ-சி-மின், கடந்த 6 தினங்களாக மாஸ்கோவில் தங்கியிருந்து ரஷ்யத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியது நினைவிருக்கலாம். இந்தப் பேச்சுவார்த்தைகளின் பலனாகவே மேற்கண்ட ஒத்துழைப்பு கிடைத்திருக்கிறது என்றும் கூறலாம்.

இதனிடையில், ஹோ-சி-மின் மாஸ்கோ செல்லுமுன்னர், பீகிங்கில், வடவியட்நாம் புனருத்தாரணம் போன்ற உதவிகளுக்காக $11\frac{1}{2}$ கோடி பவுன் (ரூ 150 கோடி) உதவ சீனா சம்மதித்து, அதன்படி ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

எரிமலை நிபுணர்கள் திகைக்கின்றனர்!

கடானியா (சிசிலி), ஜூலை 20—

ஐரோப்பா கண்டத்திலேயே மிகப் பெரிய எரிமலையான எட்னா எரிமலை, நேற்றிரவு பல நிபுணர்களையும் பிரமிக்கவைக்கும் அளவிற்கு முழு வட்டவடிவமான புகை வளையங்களை வெளியிட்டதாம்!

இந்த நிகழ்ச்சி குறித்துப் பிரபல நிபுணர்கள் பலரும், அத்தகைய ஒன்று மிக அசாதாரணமானதென்றும், அது நிகழ்வதற்கான காரணம் என்னவாயிருக்கும் என்பது பற்றித் தங்களுக்குத் தெரியவில்லை என்றும் கூறியிருக்கின்றனர்.

கரும்பு ஆராய்ச்சி நிலையம்

தென்னாட்டில் துவங்க வேண்டுவது அவசியம்

மத்திய நிபுணர் குழு யோசனை

அனகாபள்ளி, ஜூலை 20—

நெல்லிக்குப்பம் அல்லது பாலூரில், விரிவான மத்திய கரும்பு ஆராய்ச்சி நிலையம் ஒன்றையும், குடியாத்தம், திருச்சூர் ஆகிய இடங்களில் வட்டார துணை ஆராய்ச்சி நிலையங்கள் இரண்டும் நிறுவப்பட வேண்டியதின் அவசியம் குறித்து, சமீபத்தில் தென்னாட்டுக் கரும்பு உற்பத்திப் பகுதிகளைப் பார்வையிட்ட மத்திய அரசாங்கம் நியமித்த கரும்பு ஆராய்ச்சிக் குழுவின் துணை நிபுணர் குழு மாநில அரசாங்க அதிகாரிகளிடம் கருத்துத் தெரிவித்திருக்கிறதாம்.

"பெரும் அளவில் சர்க்கரை உற்பத்தி செய்யும் மாநிலமாக சென்னை உருவாகி வளர்ந்து வருகிறது; இன்னும் இரண்டாண்டுகளுக்குள்ளாக, 12 சர்க்கரை ஆலைகள் தோன்றவிருக்கின்றன; எனவே, இந்த தொழிலுக்கு உதவி மாநில அரசாங்கம், ஒரு திறமையுள்ள நிறுவனம் அமைக்க வேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும்,"

என்று, அந்த நிபுணர் குழுவின் செயலாளரான பி. பி. சந்திரா என்பவர் தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்க அணுசக்தி முறையால்......!

இந்தியா தொழில் மயமாகுமாம்!

"இன்றைய அமெரிக்காவில் நடைமுறையில் கையாளப்பட்டு வரும் அணு சக்தி முறைகளை உபயோகித்து, இந்தியா, தொழில் மயமாக்கப்படுவது துரிதப்படுத்தப்படலாம்."

என்று, 'இண்டர் நேஷனல் எலக்ட்ரிக் கம்பெனி'யின் தலைவர் ஹெராட் என்பவர் கூறியிருக்கிறார்.

"இந்தியாவில், அந்நாட்டின் எல்லைக் குள்ளாகவே, பெரும்பான்மையான அளவிற்குக் கனிப்பொருட்கள் கிடைக்கின்றன; இந்தக் கனிப் பொருட்கள் அனைத்தும் உபயோகப்படுத்தப்பட்டால், நிச்சயமாக, இந்தியா, தொழில் மயமாவதில் மிக துரிதமான முன்னேற்றம் காண முடியும்," என்றும் அவர் கூறியிருக்கிறார்.

திருவள்ளுவர் வாரம்

சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் மு. வரதராசன் அவர்கள் வரைகிறார்:—

"தமிழர் ஒன்றுபட்டு உயர்ந்து விளங்க வேண்டுமானால், அனைவரையும் பிணித்து ஒற்றுமைப் படுத்தவல்ல உயரிய ஒரு நூலாக இருப்பது திருக்குறளே; அதை, உலகினுக்கு அளித்துப் பெருமிதம் அடைவதற்குமுன், 'தமிழகத்தார் அனைவரும் அறிந்து போற்றும் பெரு நூல்,' என, அடிக்கடி முழங்குதல் வேண்டும். சிறப்பாக இளைஞர்கள், மாணவர்கள் உள்ளங்களில் ஒரு கிளர்ச்சியும், அதை ஒட்டி மற்றவர்களின் உள்ளங்களில் ஒரு மலர்ச்சியும் ஏற்பட வேண்டும். இதைக் கருத்தில் கொண்டே, சென்ற ஆண்டு அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் கூடிய மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டினர், 'ஜூலை இறுதி வாரம் திருக்குறள் வாரமாக—திருவள்ளுவர் வாரமாக நாடெங்கும், பள்ளிகளிலும், கழகங்களிலும் கொண்டாடுதல் வேண்டும்,' என்றும், 'அவ்வாரத்தில் ஒரு நாள், அரசினர் விடுமுறை நாளாகவும் விளங்க வேண்டும்,' என்றும் நன்முடிவுகள் செய்து வேண்டிக் கொண்டனர். இவ்வேண்டுகோளைத் தமிழகத்து அரசியல் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், குறள் அன்பர்கள் எல்லோரும் ஏற்றுத் தம்மால் இயன்றன எல்லாம் செய்தல், நாட்டின் முன்னேற்றத்திற்குரிய நற்பணியாகும்.

"திருவள்ளுவரின் பிறந்த நாள் முதலியன, எவை ஆயினும் ஆகுக; அவ்வந்நாளை, விரும்பியவாறு கொண்டாடுவார், கொண்டாடுக; இது, நாட்டின் ஒற்றுமைக்கும்—உயர்வுக்கும் உரிய நல்லதொரு புத்துணர்ச்சியாக விளங்க வேண்டும் என்னும் வேட்கையால் எழுந்த வேண்டுகோளாகும். தனித்தனியே சிதறுண்டு காற்றில் கலந்திடும் போற்றுதல்களும், கூக்குரல்களும், ஆண்டுதோறும் ஒரு வாரத்தில் நாடெங்கும் கேட்கும் முழக்கமாகத் திரண்டு அமைந்தால் பெரும் பயன் விளையும்.

"பள்ளிகளும், கல்லூரிகளும் தொடங்கி, புதுமை மிளிரச் செயலாற்றும் காலமாதலால், ஆண்டுதோறும் ஜூலைத் திங்களின் இறுதி வாரமே இவ்வகையில் மிகப் பயன்தருவதாகும். திருவள்ளுவரின் பெயரால் தமிழர் ஒன்றுபடமுடியும் என்பதை ஆசிரியர் உலகமும், மாணவர் உலகமும், அரசியல் உலகமும் மெய்ப்பித்துக் காட்டுதற்கு இது ஓர் அரிய வாய்ப்பாகும். ஆதலின், தமிழர் அனைவரும் தம்மால் இயன்றது செய்து, திருவள்ளுவரின் பெயரால்—திருக்குறளின் பெயரால், ஒரு வாரத்தில் ஒன்றுபட்ட முழக்கம் செய்து, தாய் மொழிக்கும், தாய் நாட்டிற்கும் ஆக்கம் தேடுமாறு வேண்டுகிறேன்."

பலியான 'காஷ்மீர் இளவரசி'

சிப்பந்திகளுக்கு ரொக்கத்தொகை

அண்மையில் இந்தியாவிற்குச் சொந்தமான 'காஷ்மீர் இளவரசி' எனும் விமானம், சிலரது முன்னேற்பாடான நாசவேலைகளால் தென் சீனக் கடலில் வெடித்து வீழ்த்தப்பட்டதல்லவா?

அந்த விமானத்தின் எல்லா சிப்பந்திகளுக்கும் விசேட ரொக்கத் தொகைகள் வழங்க 'ஏர் இந்தியா இண்டர் நேஷனல்' நிர்வாகிகள் மொத்தம் ரூ 1,85,000 அனுமதிப்பதென்று முடிவு செய்துள்ளனராம்.

மேற்படி விமான விபத்தின் போது 5 பேர் மரணமுற்றனர்; 3 பேர் அதிசயிக்கத்தக்க முறையில் உயிர் தப்பினர்.

ரொக்கத் தொகையில், விபத்தில் சிக்கி இறந்த விமான காப்டன் ஜத்தாருக்கு ரூ 60,000-மும், விமான எஞ்சினியர் குன்ஹாவிற்கு ரூ. 30,000-மும், உபசரிப்பு சிப்பந்தி உட்பட மற்ற மூவருக்கும் தலா ரூ. 20,000-மும் வழங்கப்படும் என்றும், உயிர் பிழைத்த மூவரில், காப்டன் தீட்சித் என்பவருக்கு ரூ. 15,000-மும், ஜே. பதக், எஞ்சினீயர் கார்னிக் ஆகிய இருவருக்கும் தலா ரூ. 10,000-மும் வழங்கப்படுமாம்.

இத்தொகைகள் அனைத்தும் ரொக்கமாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'போனஸ்' முறை அவசியமானதே!

வி. வி. கிரி கூறுகிறார்

"வாழ்க்கைக்குத் தேவையான—போதுமான ஊதியம் கிடைக்காத இந்தியா போன்ற அபிவிருத்தி அடையாத நாடுகளில் போனஸ் மிகமிக அவசியம்"

என்று மத்திய சர்க்கார் முன்னாள் தொழிலாளர் நல அமைச்சர் வி. வி. கிரி கூறியிருக்கிறார்.

மதுரை மீனாட்சி ஆலை தொழிலாளருக்குபோனஸ்

மதுரை மீனாட்சி துணி ஆலைத் தொழிற்சாலை நிர்வாகம், சென்ற ஆண்டு முதல் வேலை செய்த எல்லா தொழிலாளர்களுக்கும், அவரவர் அந்த ஆண்டில் சம்பாதித்த அடிப்படை ஊதியத்தில் 80 சதவிகிதத்தைப் போனசாகக் கொடுக்க ஒப்புதல் தந்துள்ளனர் என்று தெரியவருகிறது.

இதன் மூலம் மதுரையிலும், மணப்பாறையிலுமுள்ள சுமார் 4,000 தொழிலாளர்கள் போனஸ் தொகை பெறுவர் என்றும், பெரும்பாலும் இத்திங்கள் இறுதியிலேயே போனஸ் தொகை வழங்கப்படலாமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

அனுதாபம்

மதுரை நகர் தி. மு. கழக ஊழியர் தோழர் இரா. முருகேசனின் தந்தையார் திரு. இராமசாமி அவர்கள் 17-7-55-ல் இயற்கை எய்தியமைக்கு மதுரை மாவட்ட தி. மு. கழகம், மதுரை நகர் தி. மு. கழகம் ஆகியவை சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தூத்துக்குடி வழக்கு முடிவு

சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பு விவரம்

சென்னை, ஜூலை 22—

சென்ற 1953 ஜூலையில் நடைபெற்ற தி. மு. கழக மும்முனைப் போராட்டத்தின்போது, தூத்துக்குடி சதிவழக்கொன்றை உருவாக்கி நெடுங்காலமாக விசாரணை நடத்தி, இறுதியில் நெல்லை அடிஷனல் நீதிபதியால் 3 மாதம் முதல் 2 ஆண்டுகள் வரையிலும் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்ட தோழர் தங்கப்பழம் உட்பட்ட 25 பேர்கள், தங்களுக்குத் தரப்பட்ட தண்டனையை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் செய்துகொண்ட அப்பீல் மனு நேற்று நீதிபதி சோமசுந்தரம் அவர்களால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

அப்பீல் செய்துகொண்ட 25 பேர்களின் தண்டனையை ஊர்ஜிதம் செய்து, அவர்களில் இருவர் தவிர மற்ற 23 பேர்களது தண்டனைக் காலத்தை ஏற்கனவே அனுபவித்த காலத்திற்குக் குறைத்து விதித்தார்.

காசி (நாடார்), அருணாசல (நாடார்) ஆகிய இருவருக்கு மட்டுமே அவர்களுக்கு விதிக்கப்பட்ட இரண்டாண்டுக் கடுங்காவல் தண்டனையை உறுதிப்படுத்தித் தீர்ப்பளித்திருக்கிறார்.

இதர வழக்குகள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டன.

எதிரிகள் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் வி. எல். எதிராஜ் அவர்கள் மனுதாரர்கள் தங்கள் தண்டனைகளை ஆட்சேபிக்காமல், தண்டனையைக் குறைக்க வேண்டும் என்று மட்டும் கேட்டுக்கொண்டுள்ளனர் என்றும், சம்பவங்கள் நடைபெற்ற மாவட்டத்தில் தற்போது அமைதியான சூழ்நிலையே நிலவுகிறதுஎன்றும், அன்றியும், சம்பந்தப்பட்ட நபர்களனைவரும் ஏற்கனவே சுமார் 10 மாத காலமாகச் சிறையில் வைக்கப்பட்டிருந்தனர் என்றும் குறிப்பிட்டதின்பேரில், 'எதிரிகள் மீது கருணை காட்ட வேண்டியது நியாயமே' என்று குறிப்பிட்ட நீதிபதி சோமசுந்தரம் அவர்கள், தண்டனைக் காலத்தைக் குறைத்திருக்கிறார்.

ஆனால் மற்ற இருவரான காசி (நாடார்), அருணாசல (நாடார்) ஆகியோர்மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளில் கருணை காட்ட முடியாதென்றும், காசி (நாடார்) என்பவர்மீது 324-வது பிரிவுப்படி வழக்குத் தொடரப்பட்டுள்ளதென்றும், அவரது தண்டனையைக் குறைக்க வேண்டுமென்பதற்கான சரியான காரணங்கள் இல்லாததால் அவரது தண்டனையை உறுதிப்படுத்தியும் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்.

மற்றொருவரான அருணாசல (நாடார்) என்பவர்மீது, இ. பி. கோ. 148-வது பிரிவுப்படி தொடரப்பட்ட வழக்கில் விதிக்கப்பட்ட இரண்டாண்டு கடுங்காவல் தண்டனையையும், மற்றும் புதுக்கிராமத்திலுள்ள ஒரு வீட்டினுள் புகுந்து சாமான்களைச் சேதப்படுத்தியதற்காக விதிக்கப்பட்ட 6 மாதக் கடுங்காவல் தண்டனையையும் உறுதிப்படுத்தியுள்ளார்.

எதிரிகள் சார்பில், வழக்கறிஞர்கள் வி. எல். எத்திராஜ், கே. நாராயணசாமி, டி. சுந்தரம், எஸ். சாமிக்கண்ணு ஆகியோரும், சர்க்கார் தரப்பில் பப்ளிக் பிராசிகியூட்டர் வி. டி. இரங்கசாமி அய்யங்காரும் வாதாடினர்.

சென்னை மாநில முதலமைச்சர்......

தமிழ்ப் பண்டிதராகவே இருக்க வேண்டுமாம்!

"இனிமேல் சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக வருபவர் திறமைமிக்க தமிழ்ப் பண்டிதராகவே இருக்கவேண்டும்,"

என்று அண்ணாமலை பல்கலைக் கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் சிதம்பரத்தில் நடைபெற்ற தமிழ் இலக்கிய மாநாட்டில் தலைமையுரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்.

திறந்தவெளி அரங்கு

சென்னை மவுண்ட்ரோட்டிலுள்ள சர்க்கார் மாளிகை மைதானத்தில் திறந்தவெளி திரைப் படக் கொட்டகை ஒன்று நிறுவ முயற்சிக்கப்படுகிறது.

ஒரு போலீஸ்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மொழியை திணிக்கும் வட இந்தியர்களின் முடிவுக்கு இணங்கி இருப்பதுதான்;

"சென்னை சர்க்கார் வேண்டுமானால், இந்தி பற்றி ஒரு வாக்கெடுப்பு நடத்தட்டுமே — நான் அறைகூவிச் சொல்கிறேன் — மத்திய சர்க்காரின் கொள்கைக்குச் சாதகமாக 40 சத விகித மக்கள் வாக்குத் தந்தால், நான் இந்த இயக்கத்தை நிறுத்தி விடுகிறேன்; இந்த மாநிலத்தை விட்டே வெளியேறி விடுகிறேன்;

"மாநிலமெங்கும் ஆகஸ்டு முதல் தேதி கொடியைக் கொளுத்த வேண்டுமென்பது, சட்டத்தையும், அமைதியையும் குலைக்க வேண்டுமென்பதல்ல; அல்லது, எனது நண்பர் காமராசருக்குத் தொல்லைதர வேண்டுமென்பதுமல்ல;

"காமராசர் முதன்மந்திரியாயிருக்கும்போது, நான் இந்த இயக்கம் நடத்த வேண்டியிருக்கிறதே என்பதற்காக வருந்துகிறேன்;

"கொடி, வட இந்திய ஆதிக்கத்தைக் காட்டும் அடையாளமாக இருக்கிறது. வடஇந்திய ஆதிக்கத்தை தமிழகம் விரும்பவில்லை;

"ஒரு நாட்டின் கொடி புனிதமானது என்பது வெறும் மூட நம்பிக்கை;

"வேறு பல துறைகளைப் போலவே, இந்த இந்தி விஷயத்திலும், தமிழகத்திற்கு நீதி கிடைக்கவில்லை. அத்தகைய ஒரு போக்கை நாம் எதிர்க்கிறோம் என்பதைக் காட்டவே இந்த இயக்கம் நடைபெறுகிறது;

"கொடியை எரிப்பது ஒரு வீரச் செயலாக இல்லாமலிருக்கலாம்; ஆனால், அது, நமது எதிர்ப்பைக் காட்டுவதற்காக செய்யப்படுகிறது. காங்கிரஸ் அதைச் செய்யாவிட்டால் வேறு யாராவது அதைச் செய்யத்தானே வேண்டும்;

'ஆச்சாரியார்கூட இந்தி பற்றிய மத்திய அரசாங்கத்தின் கொள்கையைக்கண்டித்திருக்கிறார் 'விரும்பாத மக்களின் மீது இந்தி திணிக்கப்படக்கூடாது,' என்று; நிதிமந்திரி சுப்பிரமணியமும், அவரது சகாக்களும்கூடக் குறிப்பிட்டிருக்கின்றனர்;

"ஆச்சாரியார், தான் மட்டுமே தன்னந் தனியாக இந்தியை எதிர்க்கவிரும்பவில்லை என்று குறிப்பிட்டார்; இது, யாருக்கோ, எதிர்ப்பைக் காட்ட முன்வருமாறு அழைப்பு விடுவதாகத்தானே பொருள்படுகிறது?

"இந்த எதிர்ப்பு காமராசர், சர்க்காருக்கு எதிராக நடத்தப்படுவதல்ல; இந்தி திணிக்கப்படுவதற்கு எதிராக — உருவான காரியம் செய்யுமாறு சர்க்காரைத் தூண்டுவதற்காகத்தான்."

சின்னசேலம் திருக்குறள் கழகத் திறப்பு விழா

★

24—7—55 மாலை 6 மணிக்கு; சின்னசேலம் திருவள்ளுவர் திடலில் (கோட்டை மைதானம்) திருக்குறள் கழகத் திறப்பு விழா, திரு பி. இரத்தினசாமி தலைமையில் நடைபெறும். பிரமுகர்கள் பலர் பேசுவர்.

கழகக் கூட்டங்கள்

★

சோழபுரம் (குடந்தை அருகில்)
பந்தடி மைதானத்தில்
24—7—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: கோ. நாராயணசாமி
பேசுவோர்:
என். வி. நடராசன்
குடந்தை எஸ். ஆர். ராதா
போ. தருமன்

★

திருத்துறைப்பூண்டி
தெற்கு வீதியில்
24—7—55 மாலை 6-மணிக்கு
பேசுபவர்:
டி. கே. சீனிவாசன்

கோவை நகர தி. மு. க. தோழர்கட்கு

"17—7—55 அன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட கோவை நகர தி. மு. கழகக் கிளையின் காலி இடங்களுக்கான தேர்தல்கள், செயற் குழுவினர்களின் வேண்டுகோளுக்கிணங்க, 24—7—55 காலை 10 மணிக்கு, தெப்பக்குளம் வீதியிலுள்ள 'நகரக் கழக அலுவலகத்தில் நடைபெறும்,"

என்று, கோவை நகர தி.மு கழகச் செயலாளர் தோழர் சே. அ. ராசமாணிக்கம் அறிவிக்கிறார்.

மாயூரம் வேதநாயகம்பிள்ளை நினைவு விழா

24—7—55 மாலை 6 மணிக்கு சென்னை, டாக்டர் குருசாமி முதலியார் டி. டி. வி. உயர்பள்ளியில், சென்னை மாணவர் மன்றம், சென்னைத் தமிழாசிரியர் கழகம், பெத்துநாய்க்கன்பேட்டைத் தாய்மார் கழகம், இவற்றின் சார்பில், தமிழறிஞர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை நினைவு விழா, திரு. மயிலை சிவமுத்து தலைமையில் நடைபெறும். பிரமுகர்கள் பலர் பேசுவர்.

குடந்தையில் என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

★

24—7—55 ஞாயிறு
காலை 6 மணி: குடந்தை வருகை
8 முதல் 10 மணி வரை: கொடியேற்று விழா (பல பகுதிகளில்)
10 மணி: நகர தி. மு. கழக செயற் குழுக் கூட்டம்
மாலை 4 மணி: இளைஞர் தமிழ் மன்றக் கூட்டம்
6 மணி: சோழபுரம் பொதுக் கூட்டம்

கலப்பு மணத் தடைக்கு இருவர் பலி!

அகமதாபாத், ஜூலை 20—

தங்களது கலப்பு மணத்திற்குத் தத்தம் பெற்றோரது ஆதரவு கிடைக்காததால் வருத்தமுற்ற இரண்டு இளங்காதலர்கள் ஒரு கிணற்றினுள் விழுந்து தற்கொலை செய்து கொண்ட நிகழ்ச்சி ஒன்று ஆமதாபாத்தில் நடைபெற்றுள்ளதாகத் தெரிகிறது.

அக்காதலர்கள் இருவரும் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்த உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் என்றும், கடந்த ஞாயிறு முதலாகவே அவர்களிருவரும் காணப்படாததால் அவர்களது பெற்றோர் தேடிக் கொண்டிருந்ததாகவும், இறுதியில் ஆமதாபாத்திற்குச் சுமார் 40 கல் தொலை தூரத்திற்கு அப்பாலுள்ள ஒரு இடத்தில், ஒரு கிணற்றுக்குள்ளிருந்து அவ்விருவரின் பிரேதங்கள் கண்டெடுக்கப்பட்டன என்றும், அவர்கள் அணிந்திருந்த ஆடைகளில் 'திருமண முடிச்சு'கள் போடப்பட்டிருந்தன என்றும் தெரிகிறது.

காதலன் வயது 17 என்றும் காதலியின் வயது 16 என்றும் தெரிகிறது.

ஐய்யய்யோ!...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கண்டு, பார்ப்பனர்கள் திடுக்கிட்டிருக்கின்றனர்;

"தாங்கள் எதிர்த்து, அரசாங்கத்தைத் திரும்பப் பெறச் செய்த சுவரொட்டிகளை நமது கழகம் ஒட்டியிருப்பது தங்கள் எதிர்ப்பு முயற்சியைத் தோல்வியுறச் செய்திருப்பதால், பார்ப்பனர்கள் கோபங் கொண்டவர்களாயிருக்கின்றனர்;

"அரசாங்கத்துக்கு இதுபற்றி முறையிட வேண்டும்,' என்று, தூதுக் குழு அனுப்பவும் பார்ப்பன சங்கத்தவர் முடிவு செய்திருக்கின்றனராம்!

"சென்னையில் உள்ள பார்ப்பனத் தலைவர்களுக்கும், பத்திரிகைகளுக்கும் தங்களின் கொதிப்பைக் கொட்டிக் கடிதம் தீட்டியிருக்கின்றனராம்!

'தெருக்களில் மக்கள் கூடிநின்று சுவரொட்டிகளைப் படித்து பயன்பெறுவதைக் காணும் பார்ப்பனருக்கு எரிச்சலைக் கூட்டுவதாக இருக்கிறது.

"சர்க்கார் அந்தச்சுவரொட்டிகளை ஒட்டியபோது காட்டிய எதிர்ப்பை, இப்போது காட்ட அவர்கள் தீவிரமாக யோசித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது."

'உரிமை'யைக் காப்பதில் ஆர்வம்

காரைக்காலில், தேர்தலுக்கு வாக்குச்செய்ய எல்லோரும்வரிசையாக நின்றுகொண்டிருக்கையில் நடுத்தர வயதுடைய ஒரு பெண்மணி வெகு அவசரமாக ஓடிவந்து, தேர்தல் அதிகாரிகளிடம், தனது கணவன் வீட்டில் நோயுற்றுப் படுக்கையாக இருப்பதாகவும், அவர் இறந்துவிடக்கூடிய நிலையில் இருப்பதால், தான் உடனே வீடுசென்று கணவனைக் கவனிக்க வேண்டியிருப்பதாலும், தன்னை முதன் முதலில் வாக்குச் செய்துவிட அனுமதிக்கும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டாராம்!

அவர் மீது இரக்கங்கொண்ட தேர்தல் அதிகாரிகளும் உடனே 'கியூ' வரிசையில் இடம்விடச் சொல்லி, முதலில் அப்பெண்மணியை ஓட்டுப் போடச் செய்தனராம்!

ஒரு விநாடி நேரத்தில் வாக்குப் பதிவு செய்துவிட்டு, அப்பெண்மணி கண்களில் நீர் மல்க ஓடோடியும் வீடு சென்றாராம்!

காரியத்தில் நடைபெறுமா?

ஜினிவாவில் நடைபெறும் 4 - வல்லரசுகள் மாநாட்டில், ஆயுதக் குறைப்புப் பற்றி விவாதிக்கப்பட்டது; சோவியத் தனது இராணுவ பலம் முழுவதையும் வெளியிட முன்வருமானால், அமெரிக்கா, தன்னுடைய இராணுவ பலம் முழுவதையும் அறிவிக்கும் என்று ஐசனோவர் கூறியிருக்கிறார்.

இவ்விவாதத்தின்போது, ஆயுதக் குறைப்புக்கான திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானால், முதலில் அணு, நீர்வளிக் குண்டுகள் வைத்துள்ள நாடுகள் அவற்றின் சோதனைகளை நிறுத்த வேண்டுமென்று ரஷ்யப் பிரதமர் புல்கானின் பிரரேபித்திருக்கிறார்.

அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளும், சோவியத் ரஷ்யச் சார்பு நாடுகளும் அணு ஆக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும் என்ற அவரது பிரரேபணை மீது விவாதம் நடைபெற்று, விவாதத்தின்மீது கூறப்பட்ட யோசனைகள் அயல்நாட்டமைச்சர்களுக்கு அனுப்பப்பட்டது.

இந்தக் கூட்டத்தின்போது, பிரிட்டன் பிரதமர் சர். அந்தோனி ஈடன், பிரிட்டன் இப்போது நீர்வளிக் குண்டு செய்துகொண்டிருக்கிறது எனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

டாக்டர் லோகியா

கட்சியினின்றும் தற்காலிகமாக விலக்கப்பட்டார்!

ஜெய்ப்பூர், ஜூலை 21—

ம. சோ. கட்சியின் தேசிய நிர்வாகக் குழு, டாக்டர் லோகியாவை கட்சி உறுப்பினர் பதவியினின்றும் தற்காலிகமாக விலக்கி வைத்திருக்கிறது.

அக்குழுக் கூட்டத்தின்போது, 'தமது கட்டுப்பாடு மீறின கொள்கைக்கு லோகியா, கட்சிப் பொதுச் செயலாளரிடம் விளக்கம் தர வேண்டும்' என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டதாம்!

★

குழு திருந்துமென எதிர்பார்க்கிறாராம்!

நடவடிக்கை பற்றி லோகியா

"ம. சோ. கட்சியின் தேசிய நிர்வாகக் குழுவினரின் இந்த முடிவை நான் எதிர்பார்த்ததுதான்; இந்தச் 'சிறு' காரியங்கள் என்னை நிலைகுலைய வைத்துவிடவில்லை; ஆயினும், இந்த ஆண்டிலோ அல்லது அடுத்த ஆண்டிற்குள்ளாகவோ, குழு, திருந்திவிடுமென்று நம்புகிறேன்,"

என்று, டாக்டர் லோகியா கோவையில் கூறியிருக்கிறார்.

"நாங்கள் புதிய ஒரு கட்சி நிறுவுவது நிச்சயமே; உருவாக்கப்படும் அக்கட்சி, அநீதி எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அதனை எதிர்க்கும் ஒரு 'வீர சோஷலிச இயக்கம்' ஆக இருக்கும்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பள்ளியில் போதிய இடவசதி இல்லை!

எதிர்த்து 900 மாணவர்கள் வேலை நிறுத்தம்

அகமதாபாத், ஜூலை 20—

பள்ளியில் போதுமான இடவசதி இல்லை என்பதை எதிர்த்து மெஹ்சேனா உயர்நிலைப்பள்ளி ஒன்றைச் சேர்ந்த சுமார் 900 பள்ளி மாணவர்கள், பள்ளி செல்லாது வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

பள்ளிச் சுகாதார நிலைகள் மோசமானதாயிருப்பதாயும், விளையாடுமிடம் போதுமான அளவு இல்லை என்றும், வகுப்பு அறைகளில் நெருக்கடி அதிகமிருப்பதாகவும் மாணவர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனராம்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்கள், மாநில கல்வி அமைச்சர் இப்பிரச்சினையில் தலையிட்டுத் தீர்ப்புக்காண வேண்டுமெனக்கோரி அவருக்கு தந்தி ஒன்று அனுப்பியுள்ளனராம்.

3 - வழக்குகளில் முன்னாள் மேயருக்கு அபராதம்!

தனது வீட்டிலுள்ள குடித்தனக்காரர்களுக்கு, குழாய்களை 'ரிப்பேர்' செய்து கொடுக்காததையொட்டி, நகர சபையின் உத்தரவை நிறைவேற்றத் தவறியதாக பம்பாய் நகர முன்னாள் மேயரும், ஷெரீபுமான முகமது ரௌஜிமீது தொடரப்பட்ட 3 வழக்குகளில் தீர்ப்பளித்த நீதிபதி, அவருக்கு, ஒவ்வொரு குற்றத்திற்கும் ரூ. 35- வீதம் அபராதம் விதித்திருக்கிறார்!

சோவியத்—இந்தியா தேயிலை வர்த்தகம்!

புதுடில்லி, ஜூலை 20—

மீண்டும் சோவியத்—இந்தியா தேயிலை வர்த்தகம் ஆரம்பமாகலாமென்று கூறப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.